**Pastoral letter No/GR/ 13 / 2013**

**ஆயர் திருமுகம்**

ஈசோ மெசியாவில் அன்புக்குரிய அருள்தந்தையர்களே, அருள்சகோதரிகளே, அன்பு சகோதர சகோதரிகளே,

**நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அருளும் அமைதியும் உரித்தாகுக.**

ஒரு சில மாதங்களுக்கு பின்பு, உங்கள் யாவரையும் இந்த சுற்றுமடல் வாயிலாக சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். தூய பவுலடியாரோடு இணைந்து உங்களுக்காக நான் வேண்டும் போதெல்லாம் ‘‘நம் ஆண்டவர் யேசு கிறிஸ்துவுக்கு நன்றி செலுத்துகிறேன்” (கொலோ:1:3)என்பதை நான் நினைவில் கொள்கிறேன்.

இம்மாதம் 20-ம் தேதியை நமது கத்தோலிக்க திருச்சபை “நற்செய்தி அறிவிப்பு ஞாயிறு” ஆக கொண்டாடுகின்றது என்பதோடு மட்டுமல்ல, இந்நாளை இறை அழைத்தலுக்காவும், திருத்தொண்டு பணிகளுக்காவும் ஒதுக்கி வைத்துள்ளது. நமது மறைமாவட்டம் ஒரு திருத்தொண்டு மறைமாவட்டம் என்பது எல்ரோரும் அறிந்ததே. இதன் உருவாக்கத்திற்கு காரணமாயிருந்த சங்னனாச்சேரி உயர் மறைமாவட்டத்தையும், அதில் பணியாற்றிய குருக்கள் மற்றும் துறவியரையும் நாம் நன்றியுடன் நினைவு கூறுவோம். குறிப்பாக நாம் இன்று நினைவுகூற வேண்டியது மார். மாத்யூகாவுகாட், அன்றைய உயர் மறைமாவட்ட ஆயர். அதோடு அருட்தந்தை வீட்டுவேலிக்குந்நேல், அருட்தந்தை சக்கரியாஸ் காயத்தற, அருட்தந்தை தாமஸ் முட்டத்துக்குந்நேல் இவர்களோடு இணைந்து பலகுருக்களும் அருட்சகோதரிகளும் இறைவார்த்தையை நம்மிடையே விதைத்தனர். 27 ஆண்டுகள் தன்னுடைய வியர்வையையும், இரத்தத்தையும் இறைவனுக்காகவும் மறைமாவட்டத்திற்காகவும் சிந்தி இறைவனடி சென்ற பேரருட்தந்தை பிலிப் கொடியந்தரா அவர்களையும் நாம் இந்நாளில் நினைவு கூர்வது சாலச்சிறந்தது.

‘‘உலகெங்கும் சென்று படைப்பிற்க்கெல்லாம் நற்செய்தியை பறைசாற்றுங்கள்’’ என்ற அதிகாரபூர்வமான கட்டளையை ஏற்று அதை செயலாக மாற்ற நாம் பணியாற்றிக் கொண்டிருக்கிறோம். குறிப்பாக, நம்முடைய அருட்தந்தயர்கள், அருட்சகோதரிகள் இவர்களோடு இணைந்து இறைமக்களாகிய நீங்கள் ஒவ்வொருவரும், மறைமாவட்டத்துக்காக எடுக்கும் ஒவ்வொரு முயற்சிகளையும், கடினங்களையும் நினைவிற்க்கொண்டு உங்கள் யாவருக்கும் இவ்வேளையில் நன்றி கூறுகிறேன். இறைவன் உங்கள் யாவரையம் ஆசீர்வதிப்பாராக. நம்பிக்கை என்பது மிகவும் மதிப்பு மிக்க ஓர் இறைக்கொடை. இது நம் உள்ளத்தை திறந்து வைத்து இறைவனை அன்பு செய்ய தூண்டுகிறது. திருமுழுக்குப்பெற்ற நாம் ஒவ்வொருவரும் இந்த நம்பிக்கையை பரிசாகப் பெற்று அதை இன்றளவும் பேணிக்காக்கிறோம்.

ஆகவே திருத்தொண்டு பணி என்பது, கிறிஸ்துவோடு இணைந்து நற்செய்தியை போதிப்பதாகும். இதையே முன்னாள் திருத்தந்தை பெனடிக்ட் பதினாறு பின்வருமாறு கூறுகிறார் “திருத்தொண்டு பணி, திருச்சபையின் ஒரு முழுமையான வளர்ச்சியை காட்டுகின்றது”என்றார். நம்முடைய கிறிஸ்தவ சமூகத்தின் வளர்ச்சி முழுமையடைவது

நம்பிக்கையை வெளிப்படுத்தும் போது மட்டும் தான். இதையே நாம் திருப்பலி, மறை ரகசியங்கள் மற்றும் நற்செய்தி அறிவிப்பு பணி ஆகியவற்றின் மூலம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.

இந்த நம்பிக்கை ஆண்டோடு, இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கத்தின் 50-வது ஆண்டையும் நாம் இணைந்து கொண்டாடும் இத்தருணத்தில் திருச்சங்கம் நம்முன் வைக்கும் அறை கூவலான "எல்லைகளைக் கடந்து நற்செய்தி அறிவிக்கும் பணியை விரிவாக்க வேண்டும்" என்பதை தனதாக்க ஒவ்வொரு கிறிஸ்தவனும், கிறிஸ்தவ சமூகமும் முன்வர வேண்டும். இதுவே இறைவனின் ஆவலும் கூட.

இன்று நற்செய்தி அறிவிக்கும் பணி பல தடைகளை சந்தித்துக்கொண்டிருக்கிறது இது திருச்சபைக்கு வெளியிலிருந்து மட்டுமல்ல சில வேளைகளில் திருச்சபைக்கு உள்ளிலிருந்தும் எழுகின்றது. சில வேளைகளில் நற்செய்தியை அறிவிப்பதற்கு நமக்கு ஆர்வமில்லை. அதில் மகிழ்ச்சியில்லை. போதிய வல்லமையில்லை, அத்தோடு அதைச் சார்ந்த எதிர்பார்ப்புகளும் இல்லை. மீட்பின் பாதையைக் காட்டுவதற்காக இறைமகன் இயேசு இவ்வுலகிற்க்கு வந்தார். உலக முடிவுவரைக்கும் இதை எட்டச்செய்ய வேண்டும் என்ற கட்டளையையும் கொடுத்துள்ளார். இதனால் கிறிஸ்தவர்களாகிய நமக்கு நற்செய்தி அறிவிப்பது கடமை மட்டுமல்ல. கட்டாயமுமாகும். நீங்கள் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் நற்செய்தியை தாங்குகின்றவர்களாக இருக்க வேண்டும். உலகில் உள்ள அனைத்து திருத்தொண்டு பணியார்களுக்காவும் செபிப்போம். குறிப்பாக அருட்தந்தையர்கள் அருட்சகோதரிகள் மற்றும் பொது நிலையினர் இவர்கள் இறைவனின் அழைப்பை ஏற்று தங்களுடைய உறவுகளையும் தாய் நாட்டையம் விட்டு மொழி மற்றும் கலாச்சாரம் அறியாத இடங்களுக்கு சென்று இறை ஊழியம் செய்கின்றனர். அதுபோல் உங்கள் பிள்ளைகளையும் இறைப்பணிக்காக தயார் செய்யுங்கள். நம்முடைய மறைமாவட்டத்துக்கு இறை அழைத்தல தேவை. பெற்றோர்கள் யாவரும் இதில் அதிக கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு அன்பு பிள்ளைகளே இறைவன் உங்களோடு பேசுகின்றார், அழைக்கின்றார் அவருடைய அழைப்புக்கு செவி கொடுங்கள். ஜெபம் மூலம் உங்களுடைய தனிப்பட்ட அழைப்பை சோதனை செய்யுங்கள் நானும் உங்களுக்காக செபிக்கின்றேன்.

ஒரு புனிதர் கூறுகின்றார், ''ஒரு பெற்றோர் தன் குடும்பத்திலிருந்து ஒரு பிள்ளையை திருச்சபைக்கு கொடுத்தால், அக்குடும்பத்திற்கு 100 பிள்ளைகளைக் கொடுத்து இறைவன் ஆசீர்வதிப்பார் " என்று.

**அறிவிப்புகள்:-**

**1.** நம்பிக்கையாண்டின் கடைசி கட்டத்தை நாம் எட்டியிருக்கும் இத்தருணத்தில் சிறுபுஷ்பமிஷன்லீக்கின் சார்பாக மறைமாவட்ட அளவில் நவம்பர் 1-ம் வெள்ளிக்கிழமை மதியம் 1.30 மணியளவில் கல்லுவிளை KKSSS அலுவலகத்திலிருந்து பிலாங்காலை வரை நடை பயணம் நடைபெறவிருக்கிறது. எனவே அனைத்து பெற்றோர்களும் தங்கள் பிள்ளைகளை இந்த நடைபயணத்திற்கு அனுப்புவதோடு மற்ற பக்தசங்கங்களும் இதற்கு ஒத்துழைப்பு கொடுக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**2.** நவம்பர் 9-ம் தேதி நமது மறைமாவட்டம் உருவாக்கியதன் 17-வது ஆண்டை கொண்டாடவுள்ளோம். அதுவே நமது விசுவாச ஆண்டின் நிறைவு விழாவாகவும் அமையும். அத்தோடு அருட்தந்தை தோமஸ் பவத்து பறம்பில் அடிகளாரின் குருப்பட்ட வெள்ளி விழாவாகவும் அது அமைவதால் அனைத்து இறைமக்களும் இதில் கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறேன். இது சங்கமத்தில் வைத்து நடைபெறும்

**3.** நமது வருடாந்தர இறைவார்த்தைக் கொண்டாட்டம், படந்தாலுமூடு திரு இருதய ஆலயத்தில் வைத்து டிசம்பர் மாதம் 6,7 மற்றும் 8-ம் தியதிகளில் நடைபெறவுள்ளது. சென்னையை சார்ந்த அருட்தந்தை M.I. Raj மற்றும் அவரது குழுவினர் இதை வழி நடத்த உள்ளனர். அனைவரும் இதில் பங்கு பெற்று இறையாசீர் பெற நான் உங்களை அழைக்கிறேன்.

**4.** நமது மறைமாவட்டத்தில் வின்சென்தியர் சபை 50 ஆண்டுகளை நிறைவுசெய்து பொன்விழாவை கொண்டாடிக்கொண்டிருக்கிறது இந்த கொண்டாட்டமானது டிசம்பர் 15ம் தியதி படந்தாலுமூடு திருஇருதய ஆலயத்தில் மறைமாவட்ட அளவில் கொண்டாடவிருக்கிறோம் அனைவரும் இதற்கு ஒத்துழைத்து வெற்றிபெற செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**5.** நாம் அனைவரும் இப்போது ஜெபமாலை மாதத்தை கொண்டாடிக்கொணடிருக்கிறோம். ஒவ்வொரு பங்கு தளங்களிலும் ஜெபமாலை மற்றும் திருப்பலிகள் நிறைவேற்றப்படுவதை எண்ணி மிகவும் மகிழ்கிறேன். அன்னை மரியாளின் பரிந்துரை வழியாக அருளும் ஆசீரும் இத்தருணத்தில் உங்களை ஆட்கொள்வதாக. இச்ஜெபமாலை மாதத்தை முன்னிட்டு தக்கலை மரியாயின் சேனை ஏற்பாடு செய்திருக்கும் ஜெபமாலை திருப்பயணமானது இம்மாதம் 27- ம் தேதி ஞாயிறு அன்று பிற்பகல் 3 மணிக்கு தக்காளிவிளை பங்கிலிருந்து தொடங்கி சூசைபுரம் ஆலயம் வரை நடைபெறும். இதில் அனைவரும் குறிப்பாக, சூசைபுரம் மறைவட்ட மக்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்பாய் அழைக்கிறேன்.

ஜெபமாலை அன்னையின் பரிந்துரையும் இறையாசீரும் என்றும் உங்களோடு நிறைவாக இருக்க இறைவனை மன்றாடுகிறேன். அன்னைமரியாவைப்போன்று எளியவாழ்வினால் ஏற்றம்பெற முயல்வோம். இறையாசீர் உங்களோடு தங்குவதாக.

ஈசோவில் அன்புடன்

தக்கலை — **ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன்**

18.10.2013. — தக்கலை மறைமாவட்டம்

---

குறிப்பு: இத்திருமுகம் 20.10.2013 ஞாயிறு அன்று திருப்பலிக்கிடையே வாசிக்கவும்